www.tamilarangam.net

# தாய்நாட்டில் இருந்து...

தமிழ்மக்கள் ஜனநாயக முன்னணி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தாய்நாட்டில் இருந்து.........

தமிழ் மக்களே!

நீங்கள் உங்கள் தாயகத்தைப் பிரிந்து பிறிதொரு நாட்டினில் வாழ்வதால் உங்கள் தாய்நாட்டின் அருமையையும்; உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருடன் சொந்த மண்ணில் வாழ்வதில் உள்ள ஆறுதலையும் எங்களைவிடக் கூடுதலாக நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். இலங்கையில் வாழும் தமிழ் மக்களாகிய நாம் எமது நாட்டிலேயே அதிக உரிமையோடு, உறவுகொண்டு வாழ்வதற்கு முற்றிலும் உரித்துடையவர்கள்.

ஆனால் இன்று நடப்பது என்ன? நாம் எமது நாட்டிலேயே சுதந்திரமாக உரிமையுடன் வாழமுடியாமல் உள்ளது. எமது உயிருக்கும், உடைமைகளுக்கும் உத்தரவாதமற்ற நிலையில் எந்தநேரமும் ஏதும் நேரலாம் என்ற பீதியுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இந்நிலையில் இனிமேலும் இந்நாட்டில் வாழ்வது சகித்துக்கொள்ள முடியாததென்று பலரும் நாட்டைவிட்டு வெளியேறிய வண்ணம் இருக்கின்றனர். இப்படியே எத்தனை என்றுதான், எவ்வளவு காலத்துக்குத்தான் குடிபெயர்ந்து சென்று அந்நிய நாடுகளில் வாழமுடியும்? அந்நாடுகளில் இவர்களுக்கு எவ்வளவுதான் வசதிகள் வழங்கப்பட்டாலும் அந்நிய நாடுகளில் இவர்கள் அந்நியரே. இவர்களும் அவ்வாறே நடந்துகொள்கிறார்கள் நடத்தப்படுகிறார்கள். எனவே எமது மக்களுக்கெதிரான விரோத மனப்பான்மை அந்நாடுகளிலும் வளர்ச்சியடையவே செய்யும். அதனாலும் எமது மக்களுக்கு இன்னல்கள் ஏற்படும்-எனவே தாய்நாட்டைவிட்டு வெளியேறிய பலரும் மீண்டும் என்றோ இங்குவந்து சேருவது நிட்சயம். நாம் எமது தாய்நாட்டில் தொடர்ந்து வாழப்போவதும் நிட்சயம். எனவே நாம் எமது நாட்டில் எமக்குரிய உரிமையுடனும், சுதந்திரத்துடனும் அமைதியாக வாழவேண்டியது அவசியம். அதற்காக நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து எம்மால் இயன்றதை செய்ய முயற்சிப்பதன் முக்கியத்துவத்தை உங்களால் உணர்ந்துகொள்ள முடிந்தால்.........

எமது தாய்நாடு வாழும்! அங்கு நாமும் தலைநிமிர்ந்து வாழுவோம்!

எமது தாயகத்தில் தற்பொழுது என்ன நடைபெற்றுக்கொண்டிருக்கிறது? பொதுவாக இங்கு வாழும் எல்லா இன மக்களினதும் வாழ்க்கையை மேலும் கஷ்டமாக்கும் 'அபிவிருத்தி நடவடிக்கை'களும், தமிழ் தேசிய இனத்தை அதன் அழிவிற்கு இட்டுச்செல்லும் செயல் முறைகளும், சிங்கள மக்கள் மத்தியில் தமிழ்மக்களுக்கெதிரான துவேஷ உணர்வை வளர்க்கும் காரியங்களும் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுகின்றன.

எமது மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள், கொடுமைகள் குறித்து இங்கே தனித்தனியே விளக்க முடியாமைக்கு வருந்துகிறோம். ஆனால் நிலைமைகள் இனிமேலும் சகித்துக்கொள்ளக்கூடிய நிலையில் இல்லை என்பதை மட்டும் இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

இதுவரையும் தமிழ் மக்களுக்கு தலைமைதாங்கிய ஸ்தாபனங்கள் தமிழ் மக்களுக்கு விடுதலைபெற்றுக் கொடுப்பதற்காக உண்மையிலேயே முயற்சிக்க தவறிவிட்டன. அவற்றின் பிழையான வழிகாட்டல்களை இன்று மக்கள் உணருகின்றனர். அம்மக்களின் விடுதலைக்காக விசுவாசமான, உண்மையான தன்னலமின்றி உழைக்கக்கூடிய எல்லா சக்திகளையும் ஒன்றிணைத்து ஓர் வலிமைபெற்ற ஸ்தாபனமாக கட்டியெழுப்புவதே எமது நோக்கமும், இன்றைய தேவையும் ஆகும்.

நாம் பெரும்பாலும் எமது மக்களின் உதவியிலும் நம்பிக்கையிலும், பலத்திலுமே தங்கி நிற்கவேண்டியவர்கள். எனவே உங்களால் இயன்ற உதவியை உணர்வுபூர்வமாக தமிழ் மக்களுக்காக தாராள மனதுடன் செய்யும்படி பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நன்றி.

**தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கையில் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

S. SHANMUGANATHAN
DELFT 11
*SRI LANKA*

வெளிநாட்டில் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

K. SRITHARAN
POST GRADUATE STUDENT
DEPT OF MATHEMATICS
HERIOT WATT UNIVERSITY
RICCARTON
CURRIE
EDINBURG EH 144 AS
U. K.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்